# வேலூரில் கழக முப்பெரும் விழா - எழுச்சிமிகு காட்சிகள்!







கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.9.2023) வேலூர் மாநகர், பள்ளிகொண்டாவில் நடைபெற்ற திமுக முப்பெரும் விழாவில், பெரியார் விருதினை கி. சத்தியசீலன் அவர்களுக்கும், அண்ணா விருதினை க. சுந்தரம் அவர்களுக்கும், கலைஞர் விருதினை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி அவர்களுக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருதினை திருமதி மலிகா கதிரவன் அவர்களுக்கும், பேராசிரியர் விருதினை ந. இராமசாமி அவர்களுக்கும் வழங்கி சிறப்பித்தார்கள். இவ்விழாவில், கழக பொதுச் செயலாளரும், அமைச்சருமான துரைமுருகன், கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, கழக முதன்மைச் செயலாளரும் அமைச்சருமான கே.என். நேரு, துணை பொதுச் செயலாளர்கள் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ. ராசா, அந்தியூர் செல்வராஜ், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வேலூர் மாவட்ட கழகச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார், வேலூர் மாநகர கழகச் செயலாளர் ப. கார்த்திகேயன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (17.9.2023) வேலூர் மாநகர், பள்ளிகொண்டாவில் நடைபெற்ற திமுக முப்பெரும் விழாவில், தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் சார்பில் ”மக்களுடன் ஸ்டாலின் என்ற செயலியை கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் தொடங்கி வைத்தார். இவ்விழாவில், கழகப் பொருளானரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என். நேரு, துணை பொதுச் செயலாளர்கள் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், கழக தகவல் தொழில்நுட்ப அணியின் செயலாளரும் தொழில் துறை அமைச்சருமான டி.ஆர்.பி.ராஜா, அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வேலூர் மாவட்ட கழகச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார், வேலூர் மாநகர கழகச் செயலாளர் ப.கார்த்திகேயன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (17.9.2023) வேலூர் மாநகர், பள்ளி கொண்டாவில் நடைபெற்ற திமுக முப்பெரும் விழாவில், முத்தமிழறிஞர் கலைஞர் அறக்கட்டளை சார்பில் தமிழகத்தில் உள்ள நான்கு மண்டலங்களில் பகுதி, ஒன்றியம், நகரம், பேரூர் ஆகியவற்றில், கழகப் பணியில் சிறப்பாக செயல்பட்டவர்களுக்கு ”கழக விருது ”க்கான சான்றிதழையும் மற்றும் பொற்கிழியையும் வழங்கினார். இவ்விழாவில், கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு, துணை பொதுச் செயலாளர்கள் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வேலூர் மாவட்ட கழகச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார், வேலூர் மாநகர கழகச் செயலாளர் ப. கார்த்திகேயன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



வேலூரில் நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில், கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, வேலூர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.இராஜமார்த்தாண்டன், துணை அமைப்பாளர்கள் என்.பிரகாஷ், வி.எம்.டி.ஏ. பாலாஜி, அர்ச்சனா ப.ச.நவீன் சங்கர், மா.சத்தியமூர்த்தி, ரா. பீடா சரவணன், கே.ராஜ்கமல் ஆகியோர் வெள்ளி வீரவாள் வழங்கி வாழ்த்துப் பெற்றார்கள். கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின், மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. ஆகியோர் உடன் உள்ளார்கள்.

### தந்தை பெரியார் 145 - ஆம் ஆண்டு பிறந்த நாள்!

## சமூக நீதி நாள் உறுதிமொழியேற்பு!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில் நடைபெற்றது

சென்னை, செப். 18 -

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 145ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவான நேற்று அவரது சிலைக்கு தமிழர் தலைவர் தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டு, நினைவிடங்களில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தி, உறுதிமொழி ஏற்கப்பட்டது.

உலகத் தலைவர் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 145ஆம் ஆண்டு பிறந்த நாளான நேற்று (17.9.2023) சமூகநீதி நாளாக உலகம் முழுதும் கொண்டாடப்படுகிறது. இன்று காலை 10 மணியளவில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தலைமையில் சென்னை வேப்பேரி பெரியார் ஈ.வெ.ரா. நெடுஞ்சாலையில் அமைந்துள்ள அன்னை மணியம்மையார் சிலைக்கு கழகத் தோழர் தோழியர்கள் பெருந்திரளாக ஊர்வலமாக சென்று மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

பின்னர் பெரியார் திடலில் அமைந்துள்ள தந்தை பெரியார் 21 அடி முழு உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டும், தந்தை பெரியார் நினைவிடம், அன்னை மணியம்மையார் நினைவிடம், சுயமரியாதை சுடரொளிகள் நினைவிடங்களில் மகளிரணி சார்பில் மலர் வளையம் வைக்கப்பட்டது. தந்தை பெரியார் நினைவிடத்தில் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தி தந்தை பெரியார் பிறந்தநாள் சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் சமூக நீதி நாள் உறுதிமொழியைக்கூற, அவரைத் தொடர்ந்து அனைத்து தோழர்களும் உறுதிமொழி ஏற்றார்கள். உறுதிமொழி வருமாறு:

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்“ என்ற அன்பு நெறியையும் “யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்ற பண்பு நெறியையும் எனது வாழ்வியல் வழிமுறையாகக் கடைப்பிடிப்பேன்! சுயமரியாதை ஆளுமைத் திறனும், பகுத்தறிவுக் கூர்மைப் பார்வையும் கொண்டதாக என்னுடைய செயல்பாடுகள் அமையும்! சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் ஆகிய கொள்கைகளுக்காக என்னை நான் ஒப்படைத்துக் கொள்வேன்! மானுடப் பற்றும் மனிதாபிமானமும் ஒன்றே எனது இரத்த ஓட்டமாக அமையும்! சமூக நீதியையே அடித்தளமாகக் கொண்ட சமுதாயம் அமைக்கும் எனது பயணம் தொடர அறிவு ஆசான் தந்தைபெரியார் அவர்களது 145ஆம் ஆண்டு பிறந்த நாள் பெருவிழாவில் பெரியார் உலகமயமாகிறார். உலகம் பெரியார் மயமாகிறது என்கிற இலக்கோடு, மகிழ்ச்சியோடு நம்முடைய எதிர்ப்புகள் ஆயிரமாயிரம், தடைகள் பல்லாயிரம் என்றாலும், எங்களை யாரும் அசைக்கவோ, மறுக்கவோ முடியாது. இந்த கொள்கை ஆயிரங்காலத்துப்பயிராக வளர பெரியார் வழி நின்று புதியதோர் உலகத்தை சமைக்க மேலும் எங்களை அர்ப்பணிப்போம் அர்ப்பணிப்போம், வென்று காட்டுவோம் வென்று காட்டுவோம். வாழ்க பெரியார் வருக அவர் விரும்பிய புதிய உலகம்“

இவ்வாறு அனைவரும் உறுதியேற்றனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் பேரூராட்சியில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட கழக செயலாளர்.க. சுந்தர் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து உறுதிமொழி எடுத்துக் கொண்டார். உடன் ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன் இரா நாகன். பேரூர் செயலாளர் என் எஸ் பாரி வள்ளல் பேரூராட்சி மன்ற தலைவர் பொன் சசிகுமார் மற்றும் ஒன்றிய. பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### தந்தை பெரியார் 145 வது பிறந்த நாள் !

## பம்மல் தெற்குப் பகுதியில் சமூக நீதி நாள் உறுதிமொழி!

### வே.கருணாநிதி எம்.சி. தலைமையில் கழகத்தினர் ஏற்றனர்!

சென்னை, செப்.18-

தந்தை பெரியாரின் 145 வது பிறந்தநாளை முன்னிட்டு பம்மல் தெற்கு பகுதி த.மு.க சார்பில் அவரது திருவுருவ படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி கழகத்தினர் சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

பகுத்தறிவு தந்தை பெரியார் அவர்களின் 145வது பிறந்தநாளை முன்னிட்டு பம்மல் தெற்கு பகுதி தி.மு.க சார்பில் பம்மல் தெற்கு பகுதி செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 குழு தலைவர் வே.கருணாநிதி தலைமையில் பம்மல் போலீஸ் பூத் அருகில், பகுத்தறிவு தந்தை பெரியார் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்து,சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்றனர்.

இந்நிகழ்ச்சியில் பகுதி கழக பொருளாளர் ஆர். உமாசங்கர்,பகுதி கழக துணை செயலாளர்கள் பன்னீர்செல்வம்,துரை இளங்கோவன்,பகுதி கழகப் பிரதிநிதிகள் பா.டில்லி,மாமன்ற உறுப்பினர்கள் கல்யாணி டில்லி, மூ.இன்பசேகர், எ. மதினாபேகம்,மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ரவிச்சந்திரன்,வே.க. தன்ராஜ்,காஞ்சி வடக்கு மாவட்ட ஆதிதிராவிட நல குழு துணை அமைப்பாளர் மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் வேதாச்சலம், வட்டக் கழக செயலாளர்கள் வி.எஸ்.ஜெகநாதன், என். காந்தி, எ.அப்பாஸ், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டனர்.